தமிழ் முரசு

•26 | வாழ்வும் வளமும் | ஞாயிறு 5 10 2014

# நீரிழிவு நோய் மருத்துவக் கருத்தரங்கு

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 முதல் பிற்பகல் 1 மணி வரை, நீரிழிவு நோய் பற்றிய இலவச மருத்துவக் கருத்தரங்கு ஒன்றை பீட்டிச் சாலையிலுள்ள சிண்டா கலையரங்கத்தில் நடத்தியது. டான் டோக் செங் மருத்துவமனையில் பணியாற்றி வரும் பிரபல நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர் டாக்டர் அப்துல் ஷக்கூர், இந்தக் கருத்தரங்கை நடத்தி னார். இந்தியர்களிடையே நீரிழிவு நோய் அதிக அளவில் வளர்ந்து வரும் புள்ளி விவரங்களையும், நீரிழிவு நோயை எதிர்கொள்ளும் வழிமுறைகளையும் அவர் எடுத்துரைத்தார்.

கேள்வி பதில் அங்கமும் இடம் பெற்றது. சிண்டாவின் தலைமை அதிகாரி திரு பரதன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.